## அறிமுகம் :

## பிராந்திய வாதம் ( Regionialism)

பிராந்தியவாதம் எனும் எண்ணக்கரு சர்வதேச பண்பியல் வாதத்திலிருந்து தோற்றம் பெற்றதாக இருந்து வருகின்றது. சர்வதேச அளவில் இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு இக்கருத்தியல் வாதத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்தப்படவாரம்பித்தது என்றால் அது மிகையல்ல. வேறுவார்த்தையில் உரைப்பதாயின், இந்த உலகளாவிய போக்கானது தேசியரசுகளின் முறைமை (Nation - State System) ஒன்றை குறிப்பதாக இருக்கலாம். அத்தகைய அரசுகள் சில நூற்றாண்டுகளாக சர்வதேச உறவுகள் குறித்து தனித்துவப் பண்புகளினைக் கொண்டிருந்தன. மேலும் குடியேற்றவாதத்திலிருந்து சுதந்திரம் பெற்ற அனேக தேசிய அரசுகள் தமது நீண்டகால பாதுகாப்புக் கொள்கைகள் குறித்து கவனம் எடுக்கத் தொடங்கியதன் விளைவாக முழுஉலகம் தழுவிய புவிசார் அரசியல் (Geo-political) புவிசார்பொருளியல் (Geo-Economics) போன்ற எண்ணக் கருத்துக்கள் மீது உலகம் தழுவியதாக கவனம் திரும்பலாயிற்று.

இதனை மிகச் சுருக்கமாக சொல்வதாயின்

> *"புவியியல் ரீதியில் ஒத்ததன்மை கொண்டவையும்,*
> *சமமான வரலாற்று பாரம்பரியங்களினை*
> *பிரதிபலிக்கின்ற அதே வேளை, கலை, கலாச்சாரம்*
> *மொழி என்பன குறித்த பிரதான ஊற்றானது*
> *ஓரினத் தன்மை வாய்ந்தாகவுமுள்ள, ஒன்றுக்கு*
> *மேற்பட்ட நாடுகள் தமக்குள்ளே தேசியப் பிரச்சினைகள்*
> *குறித்து ஒருங்கிணைவையும், ஒத்திசைவையும்*
> *ஏற்படுத்திக் கொள்வதனை பிராந்தி வாதம் எனலாம்"*

அனேகமாக இன்று நம்பப்படுவது போல் மூன்றாம் உலக நாடுகள் தமது பொருளாதார அரசியல் சமூகப் பரிமாணங்களினை முன்னேறிய/ அபிவிருத்தியடைந்த நாடுகளின் பாதிப்புக்களிலிருந்தும், பாதுகாத்துக் கொள்ளும் வகையில் வளர்ச்சியடைந்த உறவினை பிராந்தியவாதம் என்ற பதம் சுட்டி நிற்கின்றது எனலாம்.

இத்தகைய உறவு முதன் முதலில் அரசியல் எல்லைகளினூடாக புவிசார் எல்லைகளினை ஒன்றிணைத்து கட்டியெழுப்பப்பட்டதாக இருந்து இப்போது கலை, கலாச்சார, பொருளியல், வர்த்தகம் என்ற பாரம்பரிய பெறுமானங்களினையும் உள்ளடக்கியதாக விரிவடைந்து வருவதனை நாம் அவதானிக்க முடியும்.

தமது தேசிய எல்லைகளினை குடியேற்றவாதம், நவகுடியேற்றவாதம், உலகமயமாக்கம் போன்றவற்றின் பாதிப்புக்களிலிருந்து பாதுகாப்பது முக்கியமாக இருப்பினும் தமது உரிமைகளினையும், தேவைகளினையும் ஒருமித்த கருத்தில் வென்றெடுக்கும் பண்பியல் சார்ந்த விளக்கத்தையும் பிராந்தியவாதம், தன்னகத்தே வைத்துள்ளதையும் கவனத்தில் கொள்ள முடியும்.

எவ்வாறாயினும் மிகப்பிந்திய அண்மைக்கால உலகமயமாக்கப் பாதிப்புக்கள் குறித்தும், உலகளாவிய வர்த்தகப் போட்டியின் தொழில் மற்றும் உற்பத்தி இழப்புக்கள் குறித்தும் அதிகம் சிந்திக்கத் தலைப்பட்டுள்ள மூன்றாம் உலக நாடுகள் தமது பிராந்தியவாதக் கண்ணோட்டத்தினை பொருளியல் முதல்வாத சிந்தனைகுறித்து விரிவுபடுத்திய போக்கினை கடைப்பிடிக்கவாரம்பித்துள்ளமையை அறிந்து கொள்ள முடியும்.

**AA Mohamed Nufile BA (Hons), MA (Econ), [redacted]**
**AN Ahamed BSc (Hons), MSc**

இன்றைய நிலையில் வைத்து நோக்கின் பெருமளவுக்கு சிறப்புத் தேற்சியினைப் பெறுவதன் மூலம் பொருளாதார நடவடிக்கையின் ஸ்தாபிதத்தை விரிவாக்கத்தினை தூண்டிவிடுதல், வர்த்தகத்திலிருந்து வரும் ஆதாயங்களினை அதிகரித்துக் கொள்ளல், உயர் அளவிலான போட்டியின் அனுகூலங்களினை பெற்றுக் கொள்ளல் என்பனவாக பிராந்தியவாதம் அரசியல் அபிலாஷைகளுக்கு அப்பால் சென்று கொண்டிருக்கின்றது எனலாம்.

இணைந்த கைத்தொழில் அமைப்புக்களினை ஒருங்கிணைத்து அதனையே வலுவான கருவியாகக் கருதிக் கொண்டு, கைத்தொழில் அபிவிருத்தியில் ஒரே தரத்திலுள்ளதுமான மூன்றாம் உலக நாடுகள், பிரதேச ரீதியான பொருளாதார, அரசியல் ஒருங்கிணைப்பால் ஒன்றிணைந்ததும், உள்-வெளி நோக்கிய பார்வையுள்ள வர்த்தகக் கொள்கையினை உருவாக்கி அதிக நன்மை அடைந்து கொள்ள முடியும். எனக் கருதி செயற்பட்டு வருகின்றன. பிராந்திய மயமாக்கலானது (Regionalization) ஒரு வகையில் உலகளாவிய வர்த்தகம், முதலீடு என்பனவற்றின் காரணமாக இன்னும் முக்கியத்துவமிக்கதாக இருந்து வருகின்றது. (R.H.S Samarathunga, Sri Lanka Economic Journal June, 2000) இன்னும் ஒரு வகையில், பல்தேசிய கம்பனிகளினூடாக உலகம் தழுவியதான வர்த்தகவிரிவும் இந்தப் பிராந்தியவாத கருத்துக்களின் மீளவும் உயிர்ப்பித்துள்ளது. (Resurgence) (Hine, 1992) (பாக்க Sri Lanka Economic Journal June, 2000)

## சுதேசிய, பிராந்திய வாதம் (Indigenous Regionalism)

தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலேயே இத்தகைய பிராந்திய வாதக் கருத்துக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த வகையில் உள்ளீடு செய்யப்பட்டுள்ளமையை நாம் இன்று அவதானிக்க முடியும். தேசிய வாதம், மாக்சிசம் என்பன மேற்கத்தியத்தினூடாக இப்பிரதேசத்திற்கு கடத்தப்பட்டிருந்தன. எனவே இவ்வகையான தெற்காசிய தென்கிழக்காசிய எண்ணக்கரு மிகப்பழமை வாய்ந்த தொன்றாக இருக்க முடியும். ஒப்பீட்டு ரீதியில், தென்கிழக்காசியப் பிராந்திய அடையாளப்படுத்தல் தெற்காசியாவுக்குப் பிறகு தோற்றுவிக்கப்பட்டது. எனவே இத்தகைய பிராந்திய வாதங்களில் காணப்படும் சுதேசிய தலைமைத்துவத்தின் செயற்பாடுகள் தொடர்பில் (கடந்தகால, நிகழ்கால, எதிர்கால) அவர்களே மிகுந்த கடப்பாடுடையவரகளாக விளங்கிவருகின்றனர். வேறுவிதமாகக் கூறுவதாயின் இத்தகையவர்கள் மதத்தின் காரணமாக, சாதியின் நிமித்தம், மொழியின் பேரில் அழைக்கப்படுவதன் தன்மையை விட்டொழித்து முழுமையாக தெற்காசியர் என்ற பொதுவான பெயர் கொண்டழைக்கப்படுவதன் அவசியம் ஒருமித்த கருத்தில் வலுப்பெறல் வேண்டும்.

இந்தவகையில் SAARC, ASEAN என்பன இத்தகைய பிராந்திய கருத்தியல் வாதத்தின் பக்கம் கவனம் செலுத்த முடிவதுடன் அதற்கான நல்ல பங்களிப்பினையும் ஆற்றமுடியும். இதற்கான எடுத்துக்காட்டை நாம் ASEAN ன் 1967ம் Bangkok பிரகடனத்தையும் 1971ன் Kuala Lumpur பிரகடனத்தையும் [சமாதானம், சுதந்திரம், நடுநிலமை (Neutrality) என்பவற்றுக்கான பிராந்தியமாக தென்கிழக்காசிய வலையம் அமையும்] இதன் மூலம் தென்கிழக்காசிய பிராந்திய கருத்தியல் தெளிவாகப் புலப்பட்டது. எனவே "சமாதானமிக்க ஒத்துழைப்பு" (Peaceful Cooperation) என்பதே முதன்மையாய் அமையவேண்டியது. அதன்படியே மற்றய ஒத்துழைப்புக்கள் சாத்தியமாய்

இருக்க முடியும். New Delhi Declaration – 1983 SAARC பிராந்தியத்தின் வெளிநாட்டு செயலாளர்களினால் வெளியிடப்பட்டு வைக்கப்பட்ட போது "பிராந்தி பொருளாதார ஒத்துழைப்பு" தொடர்பில் 9 தேர்வு செய்யப்பட்ட துறைகளில் செயற்றிட்டம் ஒன்றை ஏற்படுத்துவது என அறிக்கையிடப்பட்டது (பார்க்க WM. Karundasa- SAARC Towards Regional Co-operation – 1999 பக்கம் - 19)

## உலகமயமாதலும், பொருளாதார பிராந்திய வாதமும் (Globalization and Economic Regionalism)

இவ்விரண்டு கருத்தியல் வாதங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்பதில் பல கருத்துக்கு இடமில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுவதில் தயக்கம் இன்றும் காணப்படுகின்றது. இவை இரண்டும் புதிய சர்வதேச ஒழுங்கு / உறவு ஒன்றின் ஊடான புதிய தோற்றப்பாடுகள் என்போரும், இவை மிகப் பழமையான 19ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திற்குரியவை என்போரும் இருக்கத்தான் செய்கின்றனர்.

"The conventional Euro-centric orthodoxy that was Universalized by Colonialism has it that modern international relations began with the Treaty of Westphalia of 1848" (Paikiasothy Saravanamuthu – The Daily News 1998/02/23).
" In the 70's arguments about New International Order – NIO) The Southern Position was that free trade was fine as long as it was carried out between equals." சர்வதேச உறவுகள் குறித்து பல மாறுபட்ட கருத்துக்களின் ஓர் ஆதாரமாக மேலுள்ளதனை நாம் எடுத்துக் கொள்ள முடியும்.

ஆனால் சுதந்திர வர்த்தகம் என்பது கோட்பாட்டு ரீதியில் முன்வைத்துள்ள நலனதிரிப்பு தொடர்பில் இன்று பலத்த கண்டனங்கள் எழுந்து வருவதும் அதன் ஒரு தொடர்ச்சியே பிராந்திய வாத எழுச்சியும் எனலாம். ஒருபக்கம் சுதந்திர வர்த்தகத்தை மேற்கத்தேய முன்னேறிய நாடுகளும், அவற்றின் நிறுவனங்களும் பிரதான கோசமாக முன்வைப்பதும், ஆனால் அது தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நேர்மையற்ற வழி முறைகளும் மூன்றாம் உலகம்/ வளர்முக நாடுகளினால் அத்தகைய போக்குக்கு எதிராக எழுப்பும் கண்டனங்களும் பிரசித்தமானவை.

எனவே "தெற்காசிய பிராந்தியம்" என்ற எண்ணக்கருவின் மீது நவீனத்துவ சிந்தனைகளும், மாற்றங்களின் வடிவங்களும் அப்படியே அச்சொட்டாக உள்வாங்கப்படத்தான் வேண்டுமா? என்பது மிகப் பிந்திய அவசர கேள்வியாகும். ஏனெனில் உலகமயமாக்கல் செய்முறை இன்று வேகமாக நடைபெற்றுக் கொண்டுவருவதும் அதன் நிமித்தம் உலகளாவிய உறவுகள் குறித்து மீள்பரிசீலனையும் செய்யப்பட்டுக் கொண்டுவருவதும் உண்மையாகும்.

எல்லைகடந்த பயங்கரவாதம், சர்வதேச பயங்கரவாதம் என்பன பிரதானமாக அலசப்பட்டுவரும் இன்றைய நிலையில் ஒரு நாட்டின் மீதான யுத்தமும் சமகாலத்தில் அந்நாட்டு மக்களுக்கான உதவிகளும் (Contemparary Aid) புதிய பார்வையை குறித்து நிற்பதாக எடுத்துக் கொள்ள முடியும். எனவே புதிய உலக ஒழுங்கு குறித்து இன்று நான் எல்லோரும் சிந்திக்க வேண்டியுள்ளது. உலகில் அனைத்து மக்களும் சமத்துவம், நீதி மற்றும் அமைதி நிறைந்ததாக வாழ்வதற்கு உலகின் ஒரு மூலையில் ஓர் இனம் அமைதியின்மையுடன் இருக்கையில் சாத்தியப்பட முடியாது என்பதுவே அதுவாகும். எனவேதான் பலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைக்கான தீர்வு

என்றவகையில் "பலஸ்தீனத்துக்கான தனிராச்சியம்" வல்லரசுகளினால் இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பயங்கரவாதத்துக்கெதிரான உலகளாவிய ஒற்றுமை அது குறித்த ஒன்றுபட்ட போராட்டம் என்பன இன்னுமொரு நிதிநெருக்கடியாக (Financial Crisis) உருவெடுப்பதற்கான அனைத்து சாத்தியங்களும் தெரியவாரம்பித்திருக்கின்றன. இந்நிலையில் உலகின் பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்காவின் தலைமையிலான "உலகமயமாதல்" நடவடிக்கையே காரணம் என்ற பிடல்காஸ்ரோ- கியூபா அவர்களின் குற்றச்சாட்டு [1998ல் அவரால் பிரேசில் - சல்வடோரில் வைத்துக் கூறப்பட்டது) பார்க்க தினக்குரல் 1998/09/02].

இங்கு நினைவுகூறத்தக்கது உலகமயமாக்கல் அது குறித்த அமுலாக்கல் நிறுவனங்களான IMF/WB என்பவற்றை அவர் "சாத்தானின் முத்தமாகும்" என்று மிக காட்டமாகக் குறிப்பிட்டிருந்தார். எனவே அவர் பாணியிலேயே குறிப்பிடுவதாயின் UNOன் மறுசீரமைப்பு அதன் அத்திவாரக் கல்லிலிருந்தே மறுசீரமைக்கப்படல் வேண்டும். இதன் கருத்துயாதெனில் அரசியல், பொருளாதார கிடைப்பனவுகளினை பூர்த்திசெய்வதற்கு பொதுவான கருத்தியல் வேலைத்திட்டமும், பொதுவான தந்திரோபாயமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதாகும்.


பிராந்திய வாதச் கூட்டுக்கள் அனைத்தும் பெருவேலைத்திட்டத்தின் கீழ் பொதுவான பிணக்குகளற்ற அவை-அரசியல், பொருளாதாரம் - எத்தகைய வளங்களிலிருந்தாயினும் சரி நோக்கப்படக் கூடியதாக இருக்க வேண்டும். இதன் மூலம் மக்களின் நல்வாழ்வுக்கான தேவையை பூர்த்தி செய்ய முடிவதுடன் அம்மக்களின் நலன் அதன் இருப்பு என்பவற்றை உறுதிப்படுத்துவதன் மூலம் இன்று பிராந்திய வாதம் நீடித்து நிலைத்திருக்க முடியும். (பார்க்க paikiasothy saravanamuthu – "Globalization and Economic Regionalism in South Asia" – The Daily News 1998/02/24)

இன்றைய நிலையில் பிராந்திய மயமாதலும் - உலகமயமாதலும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான வகையில் வளர்ச்சியடைய முற்படுகின்றன. அவை ஒன்றை ஒன்று எவ்வாறாயினும் முந்திக்கொள்ள வேண்டும் என அவாவுறுகின்றன போல் தோன்றுகின்றது. உலகமயமாதல் இன்று முன்னேறிய நாடுகளில் மக்களிடையே பலத்த தாக்கங்களை சந்தித்து வருகின்றது. அதற்கு எதிரான போக்கு அதன் ஊற்றின் மூலத்திலிருந்தே எழுவது என்பது வேடிக்கையானது போல் இருப்பினும் அது தவிர்க்கப்பட முடியாததொன்று. அதுமாத்திரமன்றி அத்தகைய உலகமயமாதலுக்கு எதிரான எதிர்ப்புகள் (Anti-Globalization Protests) 1999லிருந்து 2001ம் ஆண்டின் July வரை அதிகரித்த விகிதாசாரத்தில் ஏற்பட்டும் வந்திருக்கின்றன. உதாரணமாக பின்வரும் அட்டவணையையும் வரைபையும் பார்க்க.

**Anti – Globalization Protests in Developed Countries (1999 – 2001)**

| Year | Places |
|---|---|
| 1999 Dec. 3 | Seattle – Washington, U.S.A |
| 2000 Jan 29 | DAVOS, SWITZER LAND |
| 2000 Feb 12-19 | BANGKOK |
| 2000 APR16 | WASHINGTON |
| 2000 MAY 01 | LONDON |
| 2000 JUNE 25 | GENEVA |
| 2000 JUNE 30 | MILLAV, FRANCE |
| 2000 SEP 11-12 | MELBOORNE, AUSTRALIA] |
| 2000 SEP 26 | PRAGUE |
| 2000 DEC 6-7 | NICE, FRANCE |
| 2001 JAN 27 | ZURICH, SWITZERLAND |
| 2001 APR 22 | QUEBEC, CANADA |
| 2001 JUNE 15-16 | GOTHENBURG, SWEDEN |
| 2001 JULY 20-22 | GENOA, ITALY |
| 2001 NOVEMBER | LONDON |

Sri Lanka Daily News July 24, 2001




இத்தகைய தாக்குதல் போராட்டங்களின் பின்னணி உண்மையில் வேதனையானது என்பது மட்டும் உண்மை. ஏனெனில் கடந்த காலங்களில் உலகமயமாக்கல் வளர்ச்சியடைந்த நாடுகளின் மக்களுக்கிடையே மோசமான வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வுகளையும், வறுமையையும் தீவிரப்படுத்துவந்திருக்கின்றது. உலகமயமாக்கலானது நாடுகளை ஒன்றிலொன்று தங்கியிருக்கச் செய்கின்றது என்பதற்கு மாறாக சில விடயங்களிலாவது அது உலக நாடுகளினை பிரித்து வைப்பதாகவும் அதாவது நாட்டு மக்களிடையேயும், நாடுகளுக்கிடையேயும் சமமின்மையை ஏற்படுத்துவதாகவும் சிலர் வாதிடுகின்றனர். (Ricupero,1997)

1. UNCTAD னால் வெளியிடப்பட்ட 2000-2001 க்கான உலக முதலீட்டு அறிக்கையின் (World Investment Report) படி $865b என்றவாறான உலக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் (FDI) உட்பாச்சலானது 1999ல் $633b (74% அல்லது 3 பங்கு) வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே சென்றிருந்தன.$208b (24%) வளர்முக நாடுகளுக்கும் கிடைக்கப்பெற்றன. தனியே ஐக்கிய அமெரிக்கா $276b (32%) பெற்றதன் மூலம் தனியொரு நாடு பெற்ற மிகப்பெரிய தொகையாக இருந்தது.

வளர்முக நாடுகள் குறித்து நோக்கின், 1999ம் ஆண்டில் சீனாவும் 2000ம் ஆண்டில் கொங்கொங்கும் உயர்ந்த தொகைளினை பெற்றிருந்தன. (முறையே $40b, $65b)இவற்றுக்கு அடுத்ததாக 1999ல் பிரேசில் $31b ஆஜன்டினா $23b, இலங்கை 1999ல் பெற்ற FDI $0.2b2000ல் $ 200m ஒட்டு மொத்தமாக ஆசியப் பிராந்தியம் 1999ல் $106b (12.2%) லத்தீன் அமெரிக்கா $90b (10.5%) ஆபிரிக்கா $9b (1%) பெற்றிருந்தன.

வளர்முக ஆசிய நாடுகள் 2000ம் ஆண்டில் $143b பெற்றிருந்தன. (1999ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 44% உயர்வாகும்) எனவே FDI ன் பாச்சல் ஒரு சமமற்ற அளவில் பங்கிடப்பட்டு வருவதனை நாம் இதன்மூலம் கண்டுகொள்ளமுடியும்.

2. அண்மைக்காலங்களில் அடையப்பெற்ற பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி என்பன தொழில்வாய்ப்புகள், சமூகநலன் மட்ட அதிகரிப்பு என்பவற்றின் வழி வறுமையை போதிய அளவீட்டில் குறைந்திருக்கவில்லை. என்துடன் இந்நிலை வளர்ச்சியடைந்த நாடுகளிலும், வளர்முகநாடுகளிலும் வறியோர் மயமாக்கத்தினை கணிசமானஅளவு உயர்த்தியிருக்கின்றது. ஆனாலும் ஒப்பீட்டுரீதியில் குறைவிருத்தி நாடுகள் மோசமாக பாதித்திருக்கின்றன. செல்வந்தர்க்கும் - வறியோருக்குமிடையான இடைவெளி 1986 முதல் அதிகரித்த அளவில் இருந்திருக்கிறது. (Pro.M.சின்னத்தம்பி, தில்லைநாதன் நினைவு மலர் - 2000)

உலக சனத்தொகையில் வளர்ச்சியடைந்த செல்வந்த நாடுகளில் வசிக்கும் 5%த்தியினருக்கும், ஏழைவளர்முக நாடுகளின் 5 பங்கினர்க்குமிடையில் இத்தகைய வருமான இடைவெளி 1960ல் 1 இலிருந்து 30ஆகவும் 1997ல் 1இலிருந்து 74ஆகவும் உயர்வடைந்திருந்தது. 1990களின் பிற்பகுதியில் உலகசனத்தொகையில் 5பங்கினர் உயர்வருமான நாடுகளில் வாழ்ந்ததுடன் அவர்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தி உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (world GDP) 86% தையும் உலக ஏற்றுமதிச் சந்தையில் 82% தையும், உலக FDIல் 68% தையும், 74% உலக தொலைபேசி இணைப்புகளையும் கொண்டிருந்த அதேவேளை இவைகுறித்து ஏழைநாட்டு மக்கள் வெறுமனே 1% தை மட்டுமே கொண்டிருந்தனர். (Kanes – "Globalization : Winners and Losers" – The Sunday Island on 13th August 2000)

3. நாடுகளுக்கிடையிலான சமமற்ற தன்மை அதிகரித்துவருவதும், பொருளாதார வளர்ச்சி மட்டங்களின் அடைவு குறித்த மதிப்பீடுகள் கவலைதரும் அளவுமட்டத்தினைக் காட்டிவருவதும் உலகமயமாக்கல் செய்முறையின் மோசமான தன்மையை இன்று வெளிக்காட்டுவதை அறியலாம். இத்தகைய உலகமயமாக்கல் செய்முறை வளர்முகநாடுகளின் மிகச்சிறிய நாடுகளின் வெற்றிக்கே வழிவகுத்திருந்தது. குறிப்பாக ஆசியாவின் புதிதாக கைத்தொழில் மயமான நாடுகள் (Newly Industrialized Countries – NIC's) இவை மொத்த வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளில் கணிசமான பங்கைக் கொண்டிருக்கின்றன. எனினும் 1997ல் அவை எதிர்நோக்கிய நிதி நெருக்கடியும் அதன் தொடரான பொருளாதார வீழ்ச்சியும் இவ்வாறான குறுங்கால நிதிப்பாச்சல்களின் உண்மையான விளைவை உலகுக்கு காட்டியிருந்தது. தாராள வர்த்தகம், தாராள பொருளாதாரக் கொள்கை

குறித்த எண்ணக்கருத்துகள் மீதான கண்ணோட்டம் குறித்து நோக்கின் அவை இன்னும் இதயசுத்தியுடன் தெளிவானதும் சமமானதுமான அமுலாக்கம் குறித்து மேற்கத்திய நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் வெறும் உதட்டளவிலேயேயும் எழுத்துருவிலேயேயும்தான் இருக்கின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் நிறுவனங்களினால் மூன்றாம் உலகம் தமது பண்டங்கள் சேவைகள் குறித்து தமது சந்தையை திறந்துவிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுவரும் வேளையில் மூன்றாம் உலகநாடுகளின் கோரிக்கைகளும், முன்வைப்புக்களும் WTOன் எந்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போதும் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இன்றைய நிலையில் அமெரிக்காவின் உலக வர்த்தகமையத்தின் மீதான தாக்குதல் - அதன் பின்னர் சீனாவில் நடைபெற்ற APEC அமைப்பு மகாநாட்டிலும் WTOன் அமைச்சர்கள் மட்ட மகாநாட்டிலும் (Doha – Qatar 2001, Nov) (2001 Oct) முன்வைக்கப்பட்ட புதிய சுற்று பேச்சுவார்த்தைக்கான கோரிக்கைகள் இதனை தெளிவு படுத்தப்போதுமானவையாகும்.

## பொருளாதாரக் கொள்கையும் பொருளாதாரத் தாராளமயப்படுத்தலும் (Economic policy and Economic Liberalization)

பொருளாதாரக் கொள்கை என்பது "ஒரு நாட்டின் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் பொருளியல் சார்ந்த கருத்தியல்களின் - அதன் அமுலாக்கம் என்பவற்றின் ஒரு திரட்டு" எனலாம். (Macmillan Dictionary of Modern Economics – 4th Edi p.120 ) இது இரண்டு வகைப்படும். ஒன்று; நுண்பாக பொருளியல் கொள்கை - இதன் பிரதான நோக்கம் வளஒதுக்கீட்டினை செயற்திறனான முறையில் மேற்கொள்ளுதல். மற்றயது; பேரினப் பொருளாதாரக் கொள்கை - இதன் பிரதான நோக்கம் விலை உறுதிப்பாட்டின் வழி அத்தகைய வளங்களினை பயன்படுத்துக் கொள்ளல். எனவே நுண்பாகக் கொள்கைகள் - பிராந்திய கொள்கைகளாகவும், போட்டிக்கொள்கைகளாயும் அமைய முற்பட்டன.

பொருளியல் தாராளமயப்படுத்தல் எனும் போது சந்தைப் சக்திகளினாலும் போட்டிச்சக்திகளினாலும் பொருளாதாரம் வழிநடாத்தப்படும் செய்முறைகள் எனலாம். இதற்கான மூலாதாரம் அல்லது உந்துசக்தி மேற்கு உலக நாடுகளினாலும் அதன் முகவர் நிறுவனங்களான சர்வதேச நாணய நிதியம்/ உலகவங்கி (IMF / WB) யாலும் உலகளாவிய ரீதியில் கிடைத்து வருகின்றன. IMF/WB என்பவற்றின் தத்துவார்த்தமானது; மத்திய திட்டமிடல் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் சிறந்த வள ஒதுக்கீட்டை பேணவும், துரித பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திக்கொள்ளவும் சுதந்திர சந்தைப்பொருளாதாரமும், சந்தைச் சக்திகளின் முறைமையுமே ஒரே வழியாகும். (People's Bank Sri Lanka – Economic Review April / June 2001). இதற்கான கருவிகளாக இவை பின்வருவனவற்றை வலியுறுத்தியும் வருகின்றன.

1. குறுங்காலத்தில் மெதுவான வளர்ச்சி ஏற்பட்டாலும் கூட பண வீக்கத்தினை கண்டிப்பாக கட்டுப்படுத்தல்.

2. பொருளாதாரம் வெளிநாட்டுப் போட்டியாளர்களுக்காக திறந்துவிடப் .

படுவதுடன் உள்நாட்டு தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டுவரும் பாதுகாப்புகள், மானிய உதவிகள் அரசாங்கங்களால் விலக்கிக் கொள்ளப்படுதல்.

3. சந்தைச்சக்திகளான கேள்வி - நிரம்பல் என்பன பண்டங்கள் சேவகைளுக்கான விலை நிர்ணயிப்பதற்கும், நாணய மாற்றுவீதத்தினை நிர்ணயிப்பதற்கும் அனுமதியளித்தல்.

4. அரச கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதன் மூலம் சந்தைச் சக்திகள் சுதந்திரமாக இயங்க அனுமதித்தல்.

5. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை குறைப்பதற்கு ஏதுவாக நாணய இறைக் கொள்கைகளினை மறுசீரமைத்தல்.

6. நாணய மதிப்பிறக்கம் செய்தல்.

7. வட்டிவீதத்தினை உயர்த்துதல்.

போன்ற அமைப்புரீதியான சீர்படுத்தப்படுத்தல்களை மேற்கொள்வது.

இவ்வாறான வர்த்தகம், நிதி, சேவைகள், தகவல்பரிமாற்றங்கள் காரணமாக உலகரீதியாக உலகப்பொருளாதாரத்தில் பல்தேசியக்கம்பனிகளின் (MNC's/ TNC's) பங்கும் அதிகரித்து வருகிறது ([illegible]. M. சின்னத்தம்பி – 2001). உலக உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் பல்தேசிய கம்பனிகளினதும் அதன் கிளைகளினதும் பங்கு 1980 களிலிருந்து உயர்ந்து வந்திருக்கின்றது. உலகப் பொருளாதாரத்தில் பல்தேசிய கம்பனிகள் உற்பத்தி, முதலீடு, வர்த்தகம் என்பன குறித்து தனிஆதிக்கம் வைத்திருக்கும் முக்கிய கதாபாத்திரமாக விளங்கிவருகின்றன. (Dr. B. Kelegama – The Daily News 22 Nove - 2000)

உலகத்தில் 100 மிகப்பெரிய நிறுவனங்களினை எடுத்துப்பார்த்தால் அவற்றின் மொத்த சொத்துக்கள் $4.6Tri களையும் அவற்றின் விற்பனை $4.1Tவும், உலகம் தழுவியதான அவற்றின் ஊழியர்கள் 12.7mயும் கொண்டுள்ளன. இத்தகைய நிறுவனங்கள் தொழில் நுட்ப புத்தாகத்தின் மூலமான பல வெற்றிகளை உலக நாடுகள் பலவற்றுக்கும் எடுத்துச் செல்கின்றன. அத்துடான பாதகங்கள், சாதகங்கள் என்பனவும் கடத்தப்படுகின்றன. முன்னேறிய முகாமை நுட்பங்கள், நவீன தொடர்பாடல் அணுகு முறைகள் - சந்தைப்படுத்தல் நுட்பங்களும் இவர்களால் தாம் இடப்படுத்தும் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இத்தகைய நிறுவனங்கள் தமது முதலீட்டினை இரண்டு வழிகளால் செயற்படுத்துகின்றன. ஒன்று : சென்று சேரும் நாட்டில் நேரடியாக முதலிடுதல் (Greenfield Investement) அதாவது புதிய வசதிகளினை உருவாக்கிக் கொள்வதன் மூலம் / நிர்மானித்துக்கொள்வதன் மூலம் செய்வது. BOO/BOT : build own operate / Build own Transfer. நிர்மானித்தல் சொந்தமாக்குதல் இயங்குதல் / நிர்மானித்தல் சொந்தமாக்குதல் கையளித்தல். மற்றயது : ஏற்கனவே உள்நாட்டில் செயற்படும் தனியார், அரச நிறுவனங்களினை முழுமையாக அல்லது பகுதியாக கொள்வனவு செய்து தமது தொழில் முயற்சிகளை மேற்கொள்ளல். எவ்வளவாயினும் இன்றைய நிலையில் வைத்துப்பார்ப்பின் இத்தகைய உலகமயமாக்கல் செய்முறை உலகின் அனைத்து தரப்பிலும் விமர்சனத்துக்குட்படுவதும் அதன்மீதான அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிதர்சனமாகும்.